# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.25/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாஞ்சாலை | மதம் | : இந்து |
| க/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 65 | கிராமம் | : தெக்களூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**16.04.2025**

**<u>பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

4. குப்பா ரெட்டி பெயரில் எத்தனை ஏக்கர் சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது. ஆனால் சொத்து உள்ளது. குப்பா ரெட்டி எனது மாமனார் என்றால் சரிதான். அந்த சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். குப்பா ரெட்டி எப்போது இறந்தார் என்றால் ஞாபகமில்லை. என்னுடைய கணவர்தான் மூத்தவர் என்றால் சரிதான். என் கணவர் பெயரில்தான் சொத்துக்கள் உள்ளது என்றால் என் கணவர் பெயரில் சொத்துக்கள் இல்லை. ஆனால் அவர் சம்பாதித்த சொத்துக்களை எல்லாம் கூட்டு குடும்பத்திற்குதான் கொடுத்தார்.

5. என் கணவர் யார் யாரிடம் சொத்துக்களை வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் அரிசி ஆலை உள்ளதா என்றால் முன்பு இருந்தது. தற்போது இல்லை. அது பூர்வீக சொத்து என்றால் சரிதான். அதை யார் விற்றார்கள் என்றால் 3 பேரும் விற்றார்கள். 3 பேரும் சேர்ந்து விற்றார்களா என்றால் ஆமாம். யாருக்கு விற்றார்கள் என்றால் சென்னையில் உள்ள ஒரு ஐயருக்கு விற்றார்கள். எந்த வருடம் விற்றார்கள் என்றால் தெரியாது. எனது மைத்துனர் பாமா ரெட்டி பெயரில் சொத்து எதுவும் வாங்கினார்களா என்றால் என் கணவர் கல் வியாபாரம் செய்து சம்பாதித்த பணத்தில் பாமா ரெட்டி பெயரில் வாங்கினார். யாரிடம் இருந்து அவ்வாறு வாங்கினார் என்றால் சென்னையில் உள்ள செம்மியம்மாள் என்ற ஒரு ஐயரிடம் இருந்து

வாங்கினார்கள்.

6. எந்த வருடம் எத்தனை ஏக்கர் நிலம் பாமா ரெட்டி பெயரில் வாங்கப்பட்டது என்றால் வருடம் தெரியவில்லை. 80 குழி நிலம் இருக்கும். பாமா ரெட்டி வாங்கிய சொத்தை அவரே விற்றுவிட்டார் என்றால் சரிதான். அதில் என் கணவரோ மற்றவர்களோ கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் கல் உடைத்து வியாபாரம் செய்தார் என்பதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. என் கணவருக்கு ரூட்டு மேரி என்ற மனைவி இருந்தார் என்றால் அவர் மனைவி இல்லை. அவர் கூட்டி வரப்பட்டவர் ஆவார். ரூட்டு மேரிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகன், 2 பெண் குழந்தைகள். அந்த குழந்தைகள் என் கணவருக்கு பிறந்த குழந்தைகளா என்றால் எனக்கு தெரியாது.

7. ரூட்டு மேரியின் குழந்தைகளுக்கு திருமணம் ஆனதா என்றால் எனக்கு தெரியாது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் என் கணவர்தான் அந்த குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைத்தார் என்றாலும் இல்லை. பூர்வீக சொத்துக்களை என் கணவர் விற்று ஊதாரித்தனமாக செலவழித்துவிட்டார் என்றால் என் கணவர் ஒரு செண்ட் நிலத்தை கூட விற்கவில்லை. பாமா ரெட்டி உயிருடன் உள்ளாரா என்றால் வெகு நாட்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவரது மகன் பெயர் என்ன என்றால் அரவிந்த் ஆகும். நடேச ரெட்டி எனது 2வது மைத்துனர் என்றால் சரிதான். அவருக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். என் கணவர் என்ன படித்துள்ளார் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார்.

8. பாமா ரெட்டி என்ன படித்துள்ளார் என்றால் மூவரும் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். பாமா ரெட்டி பஞ்சாயத்து தலைவராக இருந்தாரா என்றால் ஆமாம். 3 முறை பஞ்சாயத்து தலைவராக இருந்தார். நடேச ரெட்டியின் மாமனார் எந்த ஊர் என்றால் ஆர்.கே. பேட்டை புதூர் ஆகும். நடேச ரெட்டியின் மாமனார் செங்கல் சூலை போடுவரா என்றால் ஆமாம். நடேச ரெட்டி அவரது மாமனாரின் செங்கல் சூலையில் இருந்தார் என்றால் இல்லை. எங்களுடன்தான் விவசாயம் செய்தார். நடேச ரெட்டி அவரது மாமனாரின் செங்கல் சூலையில் இருந்தார் என்றாலும் எனவேதான் நடேச ரெட்டியின் மாமனார் நடேச ரெட்டி பெயரில் சொத்துக்களை வாங்கினார் என்றாலும் இல்லை.

9. நடேச ரெட்டி பெயரில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் நடேச

ரெட்டியின் மாமனார் வாங்கி கொடுத்த சொத்துக்கள் என்றாலும் என் கணவரோ, மற்றொரு சகோதரரான நடேச ரெட்டியோ பாமா ரெட்டியை கவனித்து கொள்ளவே மாட்டார்கள் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)